இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் *1765-1766/2019*

(சிறப்பு அனுமதி மனு (கு) எண்கள் 3433-34/2019-லிருந்து எழுகிறது)

வி. இராஜாராம் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

மாநில அரசு சார்பாக
காவல்துறை ஆய்வாளர்,
மத்திய புலனாய்வுத் துறை/
மாநில குற்றப் பிரிவு ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி:</u>

அனுமதி வழங்கப்பட்டது.

2. மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை நீதியராயத்தால் கு.மே. (எம்.டி.) எண் 274/2011-இல் 21.3.2019 மற்றும் 25.3.2019-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையிலிருந்து இம்மேல்முறையீடுகள் எழுகின்றன. அதில் உயர் நீதிமன்றம், மதுரை முதன்மை அமர்வு நீதிபதியால், அமர்வு வழக்கு எண் 3/2009-இல் பிறப்பிக்கப்பட்ட விடுதலை உத்தரவை நீக்கறவுசெய்து, மேல்முறையீட்டாளர்-எதிரி எண் 17-ஐ, இ.த.ச. பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் குற்றவாளியெனத் தீர்மானித்து, முறையே, ஓராண்டு மற்றும் நான்கு ஆண்டுகால கடுஞ்சிறைத் தண்டனையை அனுபவிக்கும்படி தண்டனைத் தீர்ப்பளித்தது.

3. இம்மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்வதற்கு வழிகோலிய சுருக்கமான பொருண்மைகள் கீழ்க்காணுமாறு:-

09.05.2007-ஆம் தேதியன்று, தினகரன் செய்தித்தாள், அப்போதைய முதலமைச்சரான திரு. மு. கருணாநிதியின் அரசியல் வாரிசு குறித்து பொதுமக்கள் கருத்து முடிவுகளை வெளியிட்டது, அது, திரு. மு. கருணாநிதியின் அரசியல் வாரிசாக திரு. மு.க. ஸ்டாலின், அவரது மூத்த சகோதரரான திரு. மு.க. அழகிரியைவிட பெரும்பான்மையான மக்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததாக கருத்து வெளியிட்டது. திரு. மு.க. அழகிரியின் ஆதரவாளர்களால் தினகரன் அலுவலகம் முன்பாக அச்செய்தித்தாளுக்கெதிராக ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டன. காலை சுமார் 10.00 மணியளவில், தி.மு.க.-இன் தன்னார்வத் தொண்டர் அணியின் முன்னாள் செயலாளரான சரவணனின் தலைமையில் சுமார் ஐம்பது நபர்கள் தினகரன் செய்தித்தாள் அலுவலகத்திற்கு வாகனங்களில் வந்து, உருட்டுக்கட்டைகளால் அலுவலகத்திலுள்ள கண்ணாடி சன்னல்களில் சேதத்தை ஏற்படுத்தியதுடன், கண்ணாடி கதவுகளையும் உடைக்கத்தொடங்கினர். அப்போதைய காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரான அ.சா.30-செல்வராஜ் மற்றும் மேல்முறையீட்டாளர், காவலர்களுடன் சேர்ந்து சம்பவயிடத்திற்கு வந்தனர். கட்டளையின்பேரில், மேல்முறையீட்டாளர் உட்பட அங்கிருந்த காவல்துறையினர், ஆர்பாட்டக்காரர்கள் மீது காவற்படையை ஏவி, அவர்களைத் துரத்திவிட்டனர். மீண்டும், மேற்படி சரவணன், சோடா புட்டிகளுடன் ஒரு கும்பலுடன் வந்து, அதை தினகரன் செய்தித்தாள் அலுவலகத்தில் வீசத் தொடங்கினர். மேல்முறையீட்டாளரும், மற்ற காவலர்களும், காவற்படையை ஏவி, அவர்களைத் துரத்திவிட்டனர். காலை 11.45 மணியளவில், தினகரன் செய்தித்தாள் அலுவலகத்தின் முன்பு ஆதரவாளர்கள் கூடினர். வி.பி. பாண்டி, த/பெ. பொன்னுசாமி (எ) அட்டாக் பாண்டியின் தலைமையில் ஒரு கூட்டத்தினர் 1 முதல் 16 வரையிலான

எதிரிகள் தினகரன் செய்தித்தாள் அலுவலகத்திற்கு வெள்ளைநிற டாடா சுமோ காரில், உருட்டுக்கட்டைகள் (கட்டைகள்) மற்றும் இரும்பு கம்பிகளுடன் வந்தனர். அவர்கள் அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்ததோடு, பாதுகாப்பு அலுவலகத்தின் அருகில், வளாகத்திற்குள் நிறுத்தப்பட்டிருந்த இரு சக்கர வாகனங்களுக்கும் தீ வைத்தனர். அதன்பின், அவர்கள் தினகரன் அலுவலக வளாகத்தைச் சேதப்படுத்தி, வரவேற்பு பகுதியில் தீ வைக்க முற்பட்டனர். பணியிலிருந்த தனியார் பாதுகாவலர்களால், சட்டவிரோதிகளின் மோசமான இக்குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்த முடியவில்லை. தினகரன் செய்தித்தாளின் மூன்று பணியாளர்களான வினோத் குமார் (இறந்தவர் எண் 1), கோபிநாத் (இறந்தவர் எண் 2) மற்றும் பாதுகாவலரான முத்துராமலிங்கம் (இறந்தவர் எண் 3) ஆகிய மூவரும், சூழ்ந்துகொண்ட நெருப்பில் சிக்கிக்கொண்டு, அச்சம்பவத்தில் தங்களது உயிரை இழந்தனர். தகவல் கிடைத்ததன்பேரில், தீயணைப்பு நிலைய அலுவலரான எம். பாலசுப்ரமணியன் (அ.சா.50), தீயணைப்புப் பணியாளர்கள் குழுவுடனும், தீயணைப்பு வாகனங்களுடனும் நண்பகல் 12.00 மணியளவில் தினகரன் அலுவலகத்திற்குச் சென்று, தீயை அணைக்க முயன்றனர்.

4. 09.05.2007 அன்று காவல்துறை உதவி ஆய்வாளர்-ஆலடியான் (அ.சா.1) அவர்களால் அளிக்கப்பட்ட முறையீட்டின் அடிப்படையில், 1-ஆம் எதிரி-வி.பி. பாண்டி (எ) அட்டாக் பாண்டி மற்றும் பலருக்கெதிராக இ.த.ச., பிரிவுகள் 147, 148, 449, 436, 302, 307, 332 மற்றும் 120ஆ-இன் கீழும், வெடிப்பொருட்கள் சட்டம், பிரிவுகள் 4 மற்றும் 5-இன் கீழும் மற்றும் தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்புச்) சட்டத்தின் பிரிவு 4-இன் கீழும், ஒத்தக்கடை காவல் நிலையத்தில் குற்ற எண் 226/2007-இல் பிற்பகல் 1.00 மணியளவில் மு.த.அ. தாக்கல் செய்யப்பட்டது.

காவல்துறை ஆய்வாளர் இலஷ்மணன் (அ.சா.70), முதற்கட்ட விசாரணையை மேற்கொண்டு, இறந்த நபர்களின் உடல்களை சடலக்கூறாய்விற்காக அனுப்பிவைத்தார். சடலக்கூறாய்வு நடத்திய மருத்துவர் ஜீ. நடராஜன் (அ.சா.63), இறந்த அனைவருமே தலையில் ஏற்பட்ட காயங்களால் மூச்சுத்திணறல் ஏற்பட்டதன் காரணமாகவே மரணமடைந்தனர் என்று கருத்துரைத்தார். அ.சா.70, பார்வை மகஜர் (அ.சா.ஆ.181) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.219) ஆகியவற்றை தயார் செய்தார். விசாரணை அதிகாரியான அ.சா.70 சம்பவ இடத்திலிருந்து, சான்றுப்பொருட்களான, உடைந்த கண்ணாடித் துண்டுகள், எரிக்கப்பட்ட இருசக்கர வாகனங்கள் மற்றும் பிற சான்றுப்பொருட்களையும் கைப்பற்றி, புலனாய்வை மேற்கொண்டார். தில்லி சிறப்பு காவல்துறை பணியாளர் தொகுதி சட்டத்தின் பிரிவு 6-இன் கீழ் தமிழக அரசால் வெளியிடப்பட்ட 10.5.2007-ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் எஸ்.சி./2816-2/2007-இன்படியும், மேலும் தில்லி சிறப்பு காவல்துறை பணியாளர் தொகுதி சட்டத்தின் பிரிவு 5-இன் கீழ் அறிவிக்கை எண் 228/25/2007/ஏ.வீ.டி.II-இன்படியும், வழக்கின் புலனாய்வானது ம.பு.து.-க்கு மாற்றப்பட்டது. இவ்வறிவிக்கைகளைத் தொடர்ந்து, 18.5.2007 அன்று, ஒத்தக்கடை காவல்நிலையத்தின் குற்ற எண் 226/2007 ம.பு.து.-க்கு மாற்றப்பட்டு, ம.பு.து.-ஆல் ஆர்.சி.6/எஸ்./2007/சி.டி.ஐ./எஸ்.சி.பி./சென்னை-ஆக மறுபதிவு செய்யப்பட்டு, புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. புலனாய்வு நிறைவடைந்ததன்பேரில், 06.08.2007 அன்று பதினேழு குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கெதிராக குற்ற அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டது. எ.1 முதல் எ.16 வரையிலானவர்கள் இ.த.ச., பிரிவுகள் 147, 148, 449, 302 உடனிணைந்த பிரிவு 149, இ.த.ச., பிரிவு 436

உடனிணைந்த பிரிவு 149-இன் கீழும், வெடிப்பொருட்கள் சட்டத்தின் பிரிவுகள் 4 மற்றும் 5-இன் கீழும் மற்றும் தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்பு) சட்டம், பிரிவு 4-இன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்ற அறிக்கையிடப்பட்டனர். அப்போதைய அதிகாரவரம்பிற்குட்பட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர், மேல்முறையீட்டாளர்-எதிரி எண் 17, இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்ற அறிக்கையிடப்பட்டார்.

5. 1 முதல் 16 வரையிலான எதிரிகள், இ.த.ச., பிரிவுகள் 147, 148, 449, 302 உடனிணைந்த பிரிவு 149, இ.த.ச., பிரிவு 436 உடனிணைந்த பிரிவு 149-இன் கீழும், வெடிப்பொருட்கள் சட்டத்தின் பிரிவுகள் 4 மற்றும் 5-இன் கீழும் மற்றும் தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்பு) சட்டத்தின் பிரிவு 4-இன் கீழும் குற்றஞ்சாட்டப்பட்டனர். மேல்முறையீட்டாளர்-எதிரி எண் 17, இ.த.ச., பிரிவு 217 மற்றும் 221-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டார்.

6. வினவியதன்பேரில், மேல்முறையீட்டாளர் குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்து, குற்றமற்றவர் என வாதுரைத்தார். சான்றினை பரிசீலித்ததன்பேரில், விசாரணை நீதிமன்றம், மேல்முறையீட்டாளருக்கெதிராக அளிக்கப்பட்ட சான்று, இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் குற்றங்களை நிரூபிப்பதற்கு போதுமானதல்ல என தீர்மானித்து, மேல்முறையீட்டாளரை விடுதலைசெய்தது. சம்பவ நாளன்று, சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்த மேல்முறையீட்டாளர், மேலதிகாரி அல்லர் என்றும், அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரே மேலதிகாரி என்றும், அ.சா.30-இன் தலைமையிலேயே பாதுகாப்பு ஏற்பாடு நடைபெற்றது என்ற மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞரின் பணிந்துரையை விசாரணை நீதிமன்றம் குறித்துக்கொண்டது. மேல்முறையீட்டளர்-எதிரி எண் 17 வேண்டுமென்றே

ஆணைகளை மதிக்காமல், வேண்டுமென்றே சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து எதிரிகளைத் தப்பிச்செல்ல அனுமதித்தார் என்பதை அரசுத்தரப்பு நிரூபிக்கத்தவறிவிட்டது என்று விசாரணை நீதிமன்றம் முடிவுசெய்தது. குற்றவழக்கு தொடர்வதற்கான ஒப்பளிப்பைப் பொறுத்தவரையில், ஒப்பளிப்பு ஆணையை வழங்கிய முதன்மை செயலர், விசாரணை செய்யப்படவில்லை என்றும், துணை செயலரான பாலகிருஷ்ணன் (அ.சா.67) அவர்களின் விசாரணையானது, ஒப்பளிப்பு ஆணையான அ.சா.ஆ.212-இல் கையொப்பமிட்ட முதன்மை செயலரின் மனநிறைவுக்குட்பட்டு மெய்ப்பிப்பதற்கு போதுமானதல்ல என்றும் விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது.

7. ம.பு.து.-ஆல் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றம் விடுதலை உத்தரவை எதிர்மறையாக்கி, இ.த.ச., பிரிவுகள் 147, 148, 449, 302 உடனிணைந்த பிரிவு 149, இ.த.ச., பிரிவு 436 உடனிணைந்த பிரிவு 149-இன் கீழும், வெடிப்பொருட்கள் சட்டம், பிரிவுகள் 4 மற்றும் 5-இன் கீழும், தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்பு) சட்டத்தின் பிரிவு 4-இன் கீழும், முக்கிய எதிரிகளான 16 பேர்களில் 9 எதிரிகளுக்கு தண்டனைத் தீர்ப்பளித்தது. மேலும், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்-எதிரி எண் 17-இன் விடுதலைக்கான உத்தரவை எதிர்மறையாக்கி, அவருக்கு இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் குற்றத் தீர்ப்பளித்து, ஓராண்டு மற்றும் நான்கு ஆண்டுகள் முறையே கடுஞ்சிறைத் தண்டனையை அனுபவிக்கும்படி தண்டனைத் தீர்ப்பிட்டது. தினகரன் அலுவலகத்தைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட காவல்துறைப் பிரிவினருக்கு செல்வராஜ் (அ.சா.30) தலைமை வகித்தார் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளரான மேல்முறையீட்டாளர்-எதிரி-இராஜாராம், உதவியாக இருந்தார்

என்று காவல்துறை கண்காணிப்பாளரான டி.எஸ். அன்பு அவர்களின் சாட்சியத்திலிருந்து தெளிவாக நிலைநாட்டப்பட்டுள்ளது என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. மேல்முறையீட்டாளர், 1-ஆம் எதிரியுடன் சேர்ந்து சென்றுகொண்டிருப்பதும் தெரிகிறது, மேல்முறையீட்டாளர் குற்றத்தை தடுப்பதற்கோ, குற்றவாளிகளை கைது செய்வதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் புகைப்படம் மற்றும் படக்காட்சி பதிவிலிருந்து தெரியவந்ததாக உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. மேலும், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரான செல்வராஜ் (அ.சா.30)-இன் மீது ம.பு.து., குற்ற வழக்கு தொடரத் தவறிவிட்டதால், அது மேல்முறையீட்டாளரைக் குற்றப் பொறுப்பிலிருந்து விடுவிக்காது என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் முதுநிலை அறிவியல் அலுவலர் அ.சா.77 கவுதம் ராயின் சாட்சியத்தைப் புறக்கணித்தும், புகைப்படங்கள் மற்றும் படக்காட்சிப் பதிவுகளை புறந்தள்ளியும், விசாரணை நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது என்று கருத்துரைத்து, உயர் நீதிமன்றம், ம.பு.து.-ஆல் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அனுமதித்து, மேல்முறையீட்டாளரின் விடுதலை உத்தரவை எதிர்மறையாக்கி, மேற்கூறியபடி அவருக்கு சிறைத்தண்டனை விதித்து தண்டனைத் தீர்ப்பளித்தது. வினோத் குமார் (இறந்தவர் எண் 1)-இன் தாயாரான பூங்கொடியால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு முடிக்கப்பட்டது. கு.மே. (எம்.டி.) எண் 274/2011 அதாவது ம.பு.து.,-ஆல் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மேல்முறையீட்டில் தண்டனைத் தீர்ப்பின்பேரில் மேல்முறையீட்டாளர் விசாரிக்கப்பட்டார். கு.மே. (எம்.டி.) எண் 274/2011-இல் மேல்முறையீட்டாளருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

8. மூத்த காவல்துறை அலுவலர்களான, அதாவது, காவல்துறை கண்காணிப்பாளர் (அ.சா.29) மற்றும் காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் (அ.சா.30) காவல்துறையின் பாதுகாப்புப் பணியை முறைப்படுத்தி உத்தரவுகளை அளித்துக்கொண்டிருந்ததால், எதிரிகளால் புரியப்பட்ட குற்றத்தை தடுக்காததற்கு மேல்முறையீட்டாளர் பொறுப்பாகமாட்டார் என்பதை உயர் நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது என்று மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. கிரி வாதுரைத்தார். மேலும், இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65ஆ-இன் கீழ் குறுந்தகடுகளை மெய்ப்பிப்பதற்கு தேவையானதாகக் கருதப்படுகின்ற சான்றளிப்பு ஏதுமின்றி, அவற்றின்பேரில் சார்ந்துநின்றதில் உயர் நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது என்றும் வாதுரைக்கப்பட்டது. படக்காட்சி மற்றும் புகைப்படங்களை எடுத்ததாக சொல்லப்படும் இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழின் புகைப்படக் கலைஞரான அ.சா.27-அண்ணல் மற்றும் இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் மேற்படி நக்கீரன் இதழின் செய்தியாளரான அ.சா.28-ஒளிராஜா பிறழ்சாட்சிகளாக மாறி, அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்கவில்லை என்றும், இது உயர் நீதிமன்றத்தால் கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார். உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டாளரின் விடுதலை உத்தரவை எதிர்மறையாக்கி, பிழைபுரிந்துவிட்டது என்றும், பொதுவாக சாட்சியத்தின் மதிப்பீடு பிழையானதாகவும், விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு முரணானதாகவும் இருந்தாலன்றி, விடுதலை உத்தரவில் தலையிடப்படமாட்டாது என்ற நன்கு அறுதியிடப்பட்ட கோட்பாட்டை உயர் நீதிமன்றம் கருத்திற்கொள்ளவில்லை என்றும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதுரைத்தார்.

9. அதற்குமாறாக, எதிர்மேல்முறையீட்டாளர்-ம.பு.து.-இன் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் செல்வி/திருமதி சோனியா மாத்தூர், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை ஆதரித்து, குற்றம் நடந்த அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் மேல்முறையீட்டாளர், தினகரன் செய்தித்தாள் கட்டிடத்தின் பாதுகாப்புப் பணி பொறுப்பில்தான் காலை 9.30 மணிமுதல் இருந்துவந்தார் என்றும், அவர், எதிரிகளின் மோசமான குற்றச் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கை எதனையும் வேண்டுமென்றே எடுக்கவில்லை என்றும் பணிந்துரைத்தார். எதிர்மேல்முறையீட்டாளர்-ம.பு.து.-க்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் ஆக்கக்கூறுகளின்கீழ் எங்களது கவனத்தை ஈர்த்து, "அட்டாக் பாண்டி"யும், மற்ற எதிரிகளும் குற்றம் புரிவதற்கு சென்றுகொண்டிருந்தபோது, பாதுகாப்பு பணிப்பொறுப்பில் ஈடுபட்டிருந்த மேல்முறையீட்டாளர் அத்தாக்குதலையும், தீ வைத்தலையும் எளிதில் தடுத்து, அவர்களை கைது செய்திருக்கமுடியும் என்று வாதிட்டுள்ளார். மேலும், சா.பொ.45-குறுந்தகடு, புகைப்படங்கள் மற்றும் ஆறு குறுந்தகடுகள் (சா.பொ.49 முதல் 54 வரை) ஆகியவை, புதுதில்லி மத்திய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு (ம.த.அ.ஆ.) அனுப்பிவைக்கப்பட்டன மற்றும் புகைப்படங்களிலும், குறுந்தகடிலுள்ள படக்காட்சி பதிவுகளிலும் இடைமாற்றம் உண்டுபண்ணப்படவில்லை என்பதை ம.த.அ.ஆ.-இன் முதுநிலை அறிவியல் அலுவலர்-அ.சா.77-இன் சாட்சியம் மெய்ப்பிக்கிறது, அவ்வாறிருக்கையில் வல்லுநரால் அளிக்கப்பட்ட கருத்துரையை நிராகரித்ததில் விசாரணை நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதுரைத்தார். உயர் நீதிமன்றம் சா.பொ.45-குறுந்தகடு மற்றும் பிற சான்றுப்பொருட்களான குறுந்தகடுகள் மற்றும் வல்லுநரின் சாட்சி-அ.சா.77

ஆகியவற்றின்மீது சார்ந்துநின்றது சரியே என்றும், எதிரிகளின் பங்கினையும், மேல்முறையீட்டாளரின் சட்டப்படியான கடமை தவறுதலையும் நிலைநாட்டுகின்ற குறுந்தகடுகளிலும், படக்காட்சி குறுந்தகடுகளிலும் இடைமாற்றம் உண்டுபண்ணப்படவில்லை என்றும் உயர் நீதிமன்றம் சரியாகவே தீர்மானித்துள்ளது என்று பணிந்துரைக்கப்பட்டது. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் சித்தார்த்தா வஷிஷ்ட் என்கிற மனு சர்மா -எதிர்- மாநில அரசு *(என்.சி.டி. தில்லி) (2010) 6* எஸ்.சி.சி. *1* என்ற வழக்கின்மீது சார்வுற்று, விடுதலைக்கெதிரான மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றம் சாட்சியம் முழுவதையும் மறு ஆய்வு செய்து, விடுதலை உத்தரவை மாற்றியமைத்து, அதன் சுயமுடிவுக்கு வருவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது என்றும் பணித்தார். தலையாய பரிசீலனையானது, நீதிவழுவுதலை தடுப்பதேயாகும் என்றும் வாதிட்டார். உயர் நீதிமன்றம், சரியாகவே விடுதலையை மாற்றியமைத்து, மேல்முறையீட்டாளருக்கு தண்டனைத் தீர்ப்பளித்துள்ளது என்று பணிந்துரைத்ததுடன், மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்யவும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வேண்டுரைத்தார்.

10. நாங்கள் மேற்படி வாதுரைகளைக் கவனமுடன் பரிசீலனைசெய்து, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு, சான்று மற்றும் பதிவாவணத்திலுள்ள பிற சான்றாதாரங்களையும் பார்வையிட்டோம். பரிசீலனைக்கான கூறு யாதெனில், மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை முரணானதா? மற்றும் விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட மேல்முறையீட்டாளரின் விடுதலை உத்தரவை எதிர்மறையாக்கி, இ.த.ச., பிரிவுகள் *217* மற்றும் *221*-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளருக்கு

தண்டனைத் தீர்ப்பளிப்பதற்கு, உயர் நீதிமன்றத்திற்கு சாரமான காரணங்கள் உள்ளனவா? என்பதேயாகும்.

11. மேல்முறையீட்டாளர், அப்பொழுது அதிகாரவரம்புடைய காவல்துறை துணை கண்காணிப்பாளராவார். மேல்முறையீட்டாளர், எதிரி எண் 17-ஆக வரிசைப்படுத்தப்பட்டு, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த மேல்முறையீட்டாளர், குற்றத்தை தடுப்பதற்கும், சம்பவம் நடந்த இடத்தில் குற்றவாளிகளை கைது செய்வதற்கும் திறம்பட செயலாற்றவில்லையென்று கூறியும், மேலும் எதிரிக்கு உதவும்வகையில் செயல்பட்டதாகவும் கூறி, இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். மேல்முறையீட்டாளருக்கு (தொடர்புடைய சமயத்தில் ஊமச்சிக்குளம் உட்கோட்டம், காவல்துறை துணைக் கண்காணிப்பாளராக இருந்தவர்) எதிரான குற்றச்சாட்டு யாதெனில், சம்பவ நாளன்று தினகரன் அலுவலகத்தில் இருந்தும், தினகரன் செய்தித்தாள் வளாகத்தில் பாதுகாப்புப் பணிக்காக அமர்த்தப்பட்ட முப்பத்து ஒன்பது காவலர்கள் கொண்ட குழுவுடன் ஒரே சுழற்சியில் ஐம்பது முறை சுடக்கூடிய இரண்டு சூழல் துப்பாக்கிகள், பிற ஆயுதங்கள் மற்றும் துணைப்பொருட்கள் ஆகியவற்றோடு தலைக்கவசம், பாதுகாப்பு கவசங்கள், லத்தி இன்னும்பிறவற்றைக் கொண்டிருந்தும், அவர், குற்றத்தைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதாகும். மேலும், மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகள் யாதெனில், சம்பவத்தை தடுக்க, சம்பவ இடத்திலிருந்த முப்பத்து ஒன்பது காவலர்களுக்கு வேண்டுமென்றே உத்தரவிடவில்லை என்றும், சமூக விரோதிகளை கைது செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும், மாறாக சமூக விரோதிகள் அவரது முன்னிலையிலேயே, பல்வேறான கைது செய்வதற்குரிய குற்றங்களைப்

புரிந்தபோதிலும், அவர்களை வேண்டுமென்றே கைதுசெய்ய தவறிவிட்டார் என்றும், மேலும், வேண்டுமென்றே சம்பவம் நடந்த இடத்தைவிட்டு தப்பிச்செல்ல அவர்களுக்கு உதவிபுரிந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

12. அ.சா.*2*-எ. முத்துபாண்டியன், மதுரையிலுள்ள தினகரன் செய்தித்தாளின் செய்தி ஆசிரியர் கூறியுள்ளது யாதெனில், திரு. மு. கருணாநிதி அவர்களின் அரசியல் வாரிசு குறித்து ஒரு கருத்துக்கணிப்பை நடத்த, "கருணாநிதியின் அரசியல் வாரிசு யார்?" எனக் கேட்டு *9.5.2007* அன்று தினகரன் செய்தித்தாளில் வெளியிட்டது, அது பரபரப்பை ஏற்படுத்தியது என்பதாகும். *9.5.2007* அன்று காலை, தினகரன் செய்தித்தாள் அலுவலகத்திற்கு பெருங்கூட்டம் ஒன்று வந்து, அலுவலகக் கட்டிடத்தைத் தாக்கி சேதப்படுத்தினர் என்றும், அவர் பெண் ஊழியர்களை பாதுகாப்பாக வெளியேற்றத் தொடங்கியதாகவும், மேலும் அலுவலகத்திலுள்ள கணினிகளையும், மற்ற முக்கியமான பொருட்களையும் பாதுகாக்க முயன்றார் என்றும் அ.சா.*2* தெரிவித்துள்ளார். மேலும், தினகரன் அலுவலகத்திற்கு தீ வைத்ததால், அவர் தீயணைப்பு படைக்கு உடனடியாக தெரிவித்ததாகவும், அதோடுகூட, ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு புகாரளித்து, அவரது பணியாளர்களுக்கும், அலுவலகத்திற்கும் பாதுகாப்பு அளிக்கும்படி காவல்துறையை கேட்டுக்கொண்டதாகவும் அ.சா.*2* தெரிவித்துள்ளார். மேலும் அவர், இந்த தாக்குதலைக் குறித்து, சென்னையிலுள்ள தினகரன் தலைமை இயக்க அலுவலரான அ.சா.*3*-ஆர்.எம்.ஆர். இரமேஷிடம் தெரிவித்ததாகவும் அ.சா.*2* தெரிவித்துள்ளார். அ.சா.*2* மேலும் தெரிவித்துள்ளதாவது, காவல்துறை, பாதுகாப்பு அளிப்பதற்காக யாதொரு நடவடிக்கையையும் எடுக்காததால், அவர் வெளியில் நின்றிருந்த மேல்முறையீட்டாளரின் கைபேசி எண்ணைப் பெற்றுக்கொண்டு, அ.சா.*3*-ஐ

மேல்முறையீட்டாளரிடம் பேசும்படி கேட்டுக்கொண்டார். அ.சா.3-தலைமை இயக்க அலுவலர், மேல்முறையீட்டாளரிடம் பேசியதாகவும், அவர்கள் என்ன பேசினார்கள் என்று தனக்குத் தெரியாது என்றும், பின்னர் அ.சா.3, மற்றொரு காவல்துறை துணை கண்காணிப்பாளர் கலிபுல்லா கானிடம் பேசியதாகவும் அ.சா.2 மேலும் தெரிவித்துள்ளார்.

13. சென்னையிலுள்ள தினகரன் செய்தித்தாள் தலைமை அலுவலகத்தின் தலைமை இயக்க அலுவலராக பணியாற்றிவரும் அ.சா.3-ஆர்.எம்.ஆர். இரமேஷ், 9.5.2007 அன்று காலை 9.00 மணியளவில் அ.சா.2-முத்துபாண்டியன் தன்னை அழைத்து, தினகரன் செய்தித்தாள் அலுவலக தாக்குதல் குறித்து தன்னிடம் தெரிவித்ததாக கூறியுள்ளார். மேலும், அ.சா.2-ஆல் தெரிவிக்கப்பட்ட தகவலின்பேரில், அலுவலகத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருந்த மேல்முறையீட்டாளரிடம் அவர் பேசியதாகவும், அதற்கு மேல்முறையீட்டாளர், அவர்களது காவல்துறைக் குழு வந்துகொண்டிருப்பதாகவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென தன்னிடம் கூறியதாகவும் அ.சா.3 தெரிவித்துள்ளார். நிறையபேர் அவர்களது அலுவலகத்திற்குள் நுழைந்துகொண்டிருந்தனரென அவர் தகவல் தெரிவித்ததன்பேரில், அ.சா.3 மீண்டும் மேல்முறையீட்டாளரை அழைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அவரிடம் வேண்டியதாகவும் அ.சா.3 தெரிவித்துள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர், அ.சா.3-யிடம் தனது உயர் அதிகாரிகளிடமிருந்து எந்தவொரு உத்தரவும் தனக்கு இதுவரை வரவில்லை என்று தெரிவித்து, அ.சா.3 மற்றொரு கா.து.க., கலிபுல்லா கானின் எண்ணைப் பெற்றுக்கொண்டு, மேற்சொன்ன கா.து.க.-யிடம் பேசியதாகவும், அதற்கு அவர், நிறையபேர் உள்ளே இருப்பதால், பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு அவர் அதிகமான காவலர்களை அனுப்புவதாகவும் கூறினார் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், காலை 11.00 மணியளவில், வரவேற்பு அறை முழுவதும் தீக்கிரையாகிவிட்டது என்று அ.சா.2 தனக்கு தெரிவித்ததாகவும், அவர், அ.சா.2-யிடம் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்களின் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ளும்படி கூறியதாகவும் அ.சா.3 தெரிவித்துள்ளார். பிற்பகல் 1.00 மணியளவில், அ.சா.2 தன்னை அழைத்து அலுவலக கட்டிடம் முழுவதும் தீ சூழ்ந்துவிட்டதாகவும், தீக்கொளுந்திலிருந்து எழுந்த புகைமண்டலத்தில் இரு பணியாளர்கள் தங்களது உயிரை இழந்துவிட்டதாகவும், அவர் தினகரன் அலுவலக தலைவருக்கு தகவல் அளித்தவுடன், அவர்கள் உடனடியாக விமானம் மூலம் மதுரைக்கு சென்றதாகவும் அ.சா.3 தெரிவித்திருந்தார்.

சா.பொ.45-குறுந்தகடு, புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடுகள் (சா.பொ.49 முதல் 54 வரை) ஆகியவை தொடர்பான பணிந்துரைகள்.

14. இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழில் அப்போது புகைப்படக் கலைஞராக பணிபுரிந்துவந்த அ.சா.27-அண்ணலால் எடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் முப்பத்தொரு புகைப்படங்கள் அடங்கிய சா.பொ.45-குறுந்தகட்டினை ம.பு.து. சேகரித்தது. சா.பொ.49 முதல் 54 வரையிலான குறுந்தகடுகள், தினகரன் அலுவலகத்தின் செய்தி ஆசிரியர் அ.சா.2-முத்துபாண்டியனால் ம.பு.து.-யிடம் ஒப்படைக்கப்பட்டன. அ.சா.2, தன்னிடம் சா.பொ.49 முதல் 54 வரையிலான ஆறு குறுந்தகடுகளை ஒப்படைத்ததாக விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார். ஆனால், அ.சா.2, 49 முதல் 54 வரையிலான சா.பொ-கள் ஒப்படைக்கப்பட்டதை மறுத்தார். ம.த.அ.ஆ.-இன் முதுநிலை அறிவியல் அலுவலரான அ.சா.77-இன் சாட்சியிலிருந்து தெரிவதைப்போன்று, குறுந்தகடுகள்-சா.பொ.கள் 49 முதல் 54 வரையிலானவையும்

மற்றும் சா.பொ.45-ம் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டன. அ.சா.77, தனது அறிக்கையில், "அசல் புகைப்படங்களும், படக்காட்சிகளும் மிகத் துல்லியமாகத் தெரிகின்றன" என்ற தனது கருத்துரையை அளித்தார். அ.சா.77 தனது சாட்சியத்தில் புகைப்படங்கள் எவற்றிலும் இடைமாற்றம் உண்டுபண்ணப்படவில்லை என்றும், அனைத்து புகைப்படங்களும், படக்காட்சிகளும் மிகவும் துல்லியத்தெளிவுடன் உள்ளதால் அவை உண்மையானவை என்றும் தெரிவித்துள்ளார்.

15. அ.சா.28-ஒளிராஜன், இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழின் மதுரை செய்தியாளராக பணிபுரிந்து வந்தவர் மற்றும் அ.சா.27-அண்ணல், இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழின் புகைப்படக் கலைஞராக பணிபுரிந்து வருபவராவார். அரசுத்தரப்பின் வழக்காவது, அ.சா.27-ம், 28-ம் 9.5.2007 அன்று தினகரன் அலுவலகத்தில் நடந்த சம்பவத்தைப் பதிவுசெய்துள்ளனர், அவர்கள் அச்செய்தியை தங்களது இதழுக்கு கொடுத்துவிட்டு, புகைப்படங்களை சென்னையிலுள்ள அவர்களது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர். அ.சா.27-ம், அ.சா.28-ம் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றதையும், சம்பவத்தைப் பதிவு செய்ததையும் மறுத்துவிட்டனர். அ.சா.27, தான் 9.5.2007 அன்று வயிற்று வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், பிற்பகல் 2.00 மணியளவில்தான் தினகரன் அலுவலத்திற்கு சென்றதாகவும், ஏதோ ஆர்ப்பாட்டமும், கண்டனமும் நடந்துகொண்டிருப்பதை பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார். இவ்வாறாக அ.சா.27 தினகரன் அலுவலகத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டத்தைக் குறித்தும், அவர் அதை நிழற்படங்கள் எடுத்து அதை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைத்ததைக் குறித்து மட்டுமே தெரிவித்திருந்தார். அதேபோன்று, இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழில்

செய்தியாளராக அப்பொழுது பணியாற்றிக்கொண்டிருந்த அ.சா.28, சம்பவம் நிகழ்ந்த சமயத்தில், சம்பவ இடத்திற்கு தான் செல்லவில்லை என்றும், தான் செய்தி எதனையும் சேகரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இவ்வாறாக அ.சா.27 மற்றும் 28 பிறழ்சாட்சிகளாக மாறி, அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்கவில்லை.

16. அ.சா.75-நக்கீரன் கோபால் இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழின் பதிப்பாசிரியரும், வெளியீட்டாளரும் ஆவார். அ.சா.75 தனது சாட்சியத்தில், அ.சா.27 மற்றும் 28 இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் மதுரையிலுள்ள நக்கீரன் இதழுக்காக செய்திகளை சேகரிப்பவர்களாவர், அவர்கள் தங்களது தலைமை அலுவலகத்திற்கு செய்திகளையும், நிழற்படங்களையும் அனுப்புவது வழக்கம் என்று தெரிவித்துள்ளார். ம.பு.து.-இன் விசாரணையின்போது, விசாரணை அலுவலர் (ம.பு.து.)-இன் வேண்டுகோளுக்கிணங்க, அ.சா.75, சா.பொ.45-குறுந்தகட்டை விசாரணை அலுவலரிடம் ஒப்படைத்துவிட்டதாக தெரிவித்துள்ளார். சா.பொ.45-குறுந்தகட்டில் முப்பத்து ஒன்று புகைப்படங்கள் பதிவுசெய்யப்பட்டன என்றும் அ.சா.75 தெரிவித்துள்ளார். மேலும் அ.சா.26 காமராஜ், சென்னையிலுள்ள நக்கீரன் இதழின் இணை பதிப்பாசிரியர் கூறுகையில், அ.சா.27 மற்றும் 28 மதுரையிலுள்ள தங்களது இதழில் பணிபுரிந்து வருகின்றனர் என்றும், அவர்கள் செய்திகளை சேகரித்தும், புகைப்படங்களை எடுத்தும் அவற்றை அவர்களது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார். அ.சா.26 மற்றும் 75, தினகரன் அலுவலகத்தில் நடந்த சம்பவம் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் பெறப்பட்டது குறித்தும் அவர்களது இதழில் அச்செய்திகளும், புகைப்படங்களும் வெளியிடப்பட்டது குறித்தும் தெரிவித்துள்ளனர். ஆனால், அ.சா.26 மற்றும் 75, தாங்கள் புகைப்படங்கள் ஏதும்

எடுக்கவில்லை என்றும், செய்திகளை குறித்தோ அல்லது புகைப்படங்கள் எடுத்தது குறித்தோ தனிப்பட்டமுறையில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

17. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. கிரி, சா.பொ.45-குறுந்தகடு மற்றும் ஆறு குறுந்தகடுகள் (சா.பொ.45 முதல் 54 வரையிலானவை) குறித்து ஆட்சேபணை எழுப்பியுள்ளார். மேலும், அவை ஏற்புடையதல்ல என்றும் கூறியுள்ளார். கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், சா.பொ.45 மற்றும் சா.பொ.49 முதல் 54 வரையிலானவை முதல்தர சான்றுகளல்ல என்றும், அவை இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 65-ஆ-க்கு இணங்க நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் வாதுரைத்தார். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65-ஆ-இன் கீழான தேவைப்பாடுகள் நிறைவு செய்யப்பட்டாலன்றி, இரண்டாந்தர சாட்சியம் என்ற வகையிலான மின்னணு சாட்சியம், சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது என்று வாதுரைக்க, அன்வர் பி.வி. -எதிர்- பி.கே. பஷீர் மற்றும் பலர், *(2014) 10* **எஸ்.சி.சி.** *473* என்ற வழக்கின்மீது சார்வுறப்பட்டது. மேலும், கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், ஷ.ஃ.பி முகமது -எதிர்- இமாச்சலப் பிரதேச மாநில அரசு, *(2018) 2* **எஸ்.சி.சி.** *801* என்ற வழக்கிற்கு எங்களது கவனத்தை ஈர்த்து, அன்வர் வழக்கை குறிப்பிட்ட பின்னர், ஷ.ஃ.பி முகமது என்ற வழக்கில் இருவரமர் நீதியராயம், அத்தீர்முடிவை வேறுபடுத்திக்காட்டி, பத்தி 29-இல் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 65-ஆ(4)-இன் கீழான ஒரு சான்றிதழ் எப்பொழுதும் கட்டாயத் தேவையுடையதல்ல என கருத்துரைக்கப்பட்டது என்று வாதிட்டார். மேலும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், ஷ.ஃ.பி முகமது என்ற வழக்கின் தீர்முடிவானது, *26.7.2019*

அன்று கு.மே. எண் 20825-20826/2017-இல் நீதியர் பேராயத்திற்கு குறித்தனுப்பப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

18. எதிர்மேல்முறையீட்டாளர்-ம.பு.து.-க்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் ம.த.அ.ஆ.-இன் முதுநிலை அறிவியல் அலுவலர், அ.சா.77-இன் சாட்சியமானது, படக்காட்சிகள் மற்றும் புகைப்படங்களின் உண்மைத்தன்மையை நிலைநாட்டுகிறது என்றும், அ.சா.77 தனது சாட்சியத்தில் புகைப்படங்கள், சா.பொ.45-குறுந்தகடு மற்றும் சா.பொ.49 முதல் 54 வரையிலான குறுந்தகடுகள் உண்மையானவை மற்றும் அவை இடைமாற்றம் உண்டுபண்ணப்படாதவை என்பதை தெளிவுப்படுத்தியுள்ளார் என்று பணிந்துரைத்தார். கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் சோனு என்கிற அமர் -எதிர்- உறரியானா மாநில அரசு, *(2017) 8* ***எஸ்.சி.சி.*** *570* என்ற வழக்கின் மீது சார்ந்துநின்று, இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 65-ஆ-வின் கீழ், சான்றுப்பொருட்களை அனுமதிக்கும்வேளையில், பிரிவு 65-ஆ(4)-இன் கீழ் தேவைப்படுகின்ற சான்றளித்தல் தொடர்பாக, எதிரி, விசாரணை நீதிமன்றத்தின் முன்பு எதிர்த்துரைக்கும் நடவடிக்கையேதும் எடுக்கவில்லை என்று பணிந்துரைத்தார். ஆவணங்கள்/சான்றுப்பொருட்களை அனுமதிப்பது குறித்த மறுப்புரையேதுமிருப்பின், அவற்றை வழக்கு விசாரணை நிலையிலும், ஆவணங்களை சான்றாவணங்களாகக் குறியீடு செய்யும் சமயத்திலும் எடுத்துக்கொள்ளவேண்டுமேயன்றி, அதற்குப்பிறகல்ல என்று வாதிடப்பட்டது.

19. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், ஷ.ஃ.பி முகமது என்ற வழக்கின்மீது சார்ந்துநின்று, குற்றவழக்கு தொடர்வதன் அறுதியான நோக்கமானது, உண்மையை அடைவது எனும்போது, பிரிவு 65-ஆ(4)-இன் கீழ் உறுதிச்சான்று

கிடைக்கக்கூடியதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில், சான்று பகுதி/ சான்றுப்பொருட்கள் நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து தள்ளிவைக்கப்படக்கூடாது என்று வாதிட்டார். எதிரியின் குற்றச் செயல்களையும், மேல்முறையீட்டாளரின் செயல்பாடு, சிரத்தையான செயல்பாடில்லை என்பதையும் நிரூபிப்பதற்கு பிரிவு 65-ஆ(4)-இன் கீழ் உறுதிச்சான்று கிடைக்காதபோதிலும், ம.த.அ.ஆ.-இன் முதுநிலை அறிவியல் அலுவலரான அ.சா.77-இன் சாட்சியத்தைப் பரிசீலித்து, உயர் நீதிமன்றம் குறுந்தகடுகளை சரியாகவே பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டன என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

20. மேல்முறையீட்டாளரின் விடுதலை உத்தரவை எதிர்மறையாக்குவதற்காக, உயர் நீதிமன்றம் சா.பொ.45-குறுந்தகடு, புகைப்படங்கள் சா.பொ.49 முதல் 54 வரையிலானவற்றைக் குறிப்பிட்டுக்காட்டியது. சா.பொ.45-குறுந்தகடு, புகைப்படங்கள், நக்கீரன் இதழில் வெளியான செய்திகள் மற்றும் பிற சான்றுகள் அரசுத்தரப்பால் சார்வுறப்பட்டன. முன்னதாக குறிப்பிட்டுள்ளபடி, தினகரன் அலுவலகத்தின் செய்தி ஆசிரியரான அ.சா.2, ஆறு குறுந்தகடுகளான சா.பொ.49 முதல் 54 வரையிலானவற்றை விசாரணை அலுவலரிடம் ஒப்படைத்ததை மறுத்தார். விசாரணை அலுவலர் தனது சாட்சியத்தில் அ.சா.2, சா.பொ.49 முதல் 54 வரையிலான ஆறு குறுந்தகடுகளை ஒப்படைத்ததாக தெரிவித்துள்ளார். உயர் நீதிமன்றம், ம.த.அ.ஆ.-இன் முதுநிலை அறிவியல் அலுவலரான அ.சா.77-இன் அறிக்கையைக் குறிப்பிட்டு, அ.சா.77-இன் சாட்சியமானது புகைப்படங்களும், படக்காட்சிகளும் போலியானவையல்ல என்பதைக் காண்பிக்கிறது என தீர்மானித்தது. சா.பொ.45-குறுந்தகடு மற்றும் பிற சான்றுப்பொருட்களான குறுந்தகடுகளைக் குறிப்பிட்டுக்காட்டி, குறுந்தகடுகளில் உள்ள படக்காட்சிப் பதிவுகளும்,

புகைப்படங்களும் போலியானவையாக இருக்கக்கூடும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் அதைப் புறக்கணித்ததில் பிழைபுரிந்துவிட்டதாகவும், விசாரணை நீதிமன்றத்தின் மேற்சொன்ன அணுகுமுறையானது முறைதிறம்பியது என்றும் உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. அத்தகைய காண்முடிவுகளின்பேரில் உயர் நீதிமன்றம் அனைத்து எதிரிகளின் விடுதலையையும், மேலும் மேல்முறையீட்டாளர்-எதிரி எண் 17-இன் விடுதலையையும் எதிர்மறையாக்கியது. இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட மற்ற எதிரிகளுக்கெதிரான மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதால் சா.பொ.45-குறுந்தகடு, புகைப்படங்கள் மற்றும் சா.பொ.49 முதல் 54 வரையிலான வேறுபிற குறுந்தகடுகள், தொடர்பான வாதுரைகளின் தகுதிப்பாடுகளுக்குள் செல்ல நாங்கள் எண்ணவில்லை. இல்லாவிடில், இது உச்ச நீதிமன்றத்தின் முன்பு நிலுவையிலுள்ள மற்ற குற்றவியல் மேல்முறையீடுகளிலுள்ள தரப்பினர்களின் நலனை பாதிக்கக்கூடும். ஆகவே, அரசுத்தரப்பால் சார்வுறப்பட்ட சா.பொ.45-குறுந்தகடு மற்றும் பிற குறுந்தகடுகள் (சா.பொ.49 முதல் 54 வரையிலானவை), புகைப்படங்கள் மற்றும் பிற மின்னணு சான்றுகள் மற்றும் இருவாரங்களுக்கொருமுறை வெளியாகும் நக்கீரன் இதழில் வெளியிடப்பட்ட செய்திகள் ஆகியவை தொடர்பான வாதுரைகள் குறித்த எங்களது கருத்துகளை வெளியிட நாங்கள் அறிந்தே தவிர்த்துவிட்டோம்.

21. மேல்முறையீட்டாளர், இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார். தொடர்புடைய காலத்தில், மேல்முறையீட்டாளர், அப்பொழுது அதிகாரவரம்பிற்குட்பட்ட பிரிவின் காவல்துறை துணை கண்காணிப்பாளராவார். மேல்முறையீட்டாளருக்கெதிரான

குற்றச்சாட்டு யாதெனில், அவர் எதிரிகளை சட்டப்படியான தண்டனையிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் சட்டத்திற்கு கீழ்ப்படியாததாலும், எதிரிகளை சம்பவ இடத்திலிருந்து தப்பிச்செல்ல வேண்டுமென்றே அனுமதித்ததாலும், அவர் இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டார் என்பதாகும். அளிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியத்தின் துணைகொண்டு பார்த்தால், இ.த.ச.-இன் பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளனவா? மேலும், உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டாளரின் விடுதலை உத்தரவை எதிர்மறையாக்கியது சரிதானா? என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது.

22. இ.த.ச., பிரிவு 217-ஆனது, அலுவலக பணியில் அரசு பணியாளரின் கீழ்ப்படியாமை குறித்து விவாதிக்கிறது. இ.த.ச., பிரிவு 217-இன் கீழ் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆக்கக்கூறுகள் நிரூபிக்கப்படவேண்டும்.

i) அரசு பணியாளரால் உட்கருத்துடன் சட்டத்திற்கு கீழ்ப்படியாமல் இருத்தல்; மற்றும்

ii) அத்தகைய கீழ்ப்படியாமையானது, காப்பாற்றும் உட்கருத்துடனோ அல்லது அறிந்தோ, அதன்மூலம் அவர் அ) நபர் ஒருவரை சட்டப்படியான தண்டனையிலிருந்து காப்பாற்றுதல் அல்லது ஆ) சொத்து எதனையும் சட்டப்படியான பறிமுதலிலிருந்தும் அல்லது பொறுப்பிலிருந்தும் காப்பாற்றுதல்.

இ.த.ச., பிரிவு 221, குற்றவாளியை கைது செய்யாது விடுதல் அல்லது குற்றவாளி தப்பிச்செல்ல உடன்படுதல் குறித்து விவாதிக்கிறது. இ.த.ச., பிரிவு 221-இன் கீழ் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க:-

i) குற்றஞ்சாட்டப்பட்டவர் அரசு பணியாளராக இருத்தல்வேண்டும்;

ii) கேள்விக்குள்ளான நபர் ஒரு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டிருந்தார் என்றாலோ; அல்லது அந்நபர் ஒரு குற்றத்திற்காக கைது செய்யப்படுவதற்குரியவராயிருந்தாலோ;

iii) அக்குற்றத்திற்காக அந்நபரை கைது செய்ய, குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டப்படி கடப்பாடுடையவராயிருந்து; அவர் கைது செய்ய தவறுதல்; அவர் அவ்வாறு வேண்டுமென்றே செய்தல் ஆகியவற்றை அரசுத்தரப்பு நிரூபித்தல்வேண்டும்.

23. மேல்முறையீட்டாளர், குற்ற சம்பவத்தையும், தீவைப்பையும், எளிதில் தடுத்துநிறுத்தி, எதிரி "அட்டாக்" பாண்டியும், அவரது கூட்டத்தினரும் கைது செய்வதற்குரிய குற்றத்தைப் புரிவதற்கு சென்றபோது, அவர்களை கைது செய்திருக்கவும் முடிந்திருக்கும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது சரிதானா? என்பதை அரசுத்தரப்பால் அளிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியத்தின் துணைகொண்டு பார்க்கவேண்டும்.

24. அ.சா.ஆ.82 என்பது அ.சா.29-டி.எஸ். அன்பு, காவல்துறை கண்காணிப்பாளரின் ஆணைப்படியான பாதுகாப்புப்பணிப் பட்டியலாகும். அ.சா.ஆ.82-இன்படி காவல்துறை அலுவலர்கள், சம்பவம் நடந்த இடத்தில் பாதுகாப்புப்பணிக்காக இருந்தனர், மேலும் மேல்முறையீட்டாளரின் மேலதிகாரியான, அ.சா.30-செல்வராஜ்-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரும் வரிசை எண் 1-இல் குறிப்பிடப்பட்டுள்ளார். சம்பவம் நடந்த நாளன்று காவல்துறை கூடுதல் துணை கண்காணிப்பாளரான அ.சா.30-செல்வராஜ் தலைமையில் பாதுகாப்புப் பணி

மேற்கொள்ளப்பட்டு, அவர் அதிரடி படையினருடன் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தார். அவர்கள் மேல்முறையீட்டாளருடன் சேர்ந்து போராட்டக்காரர்களை துரத்திவிட்டனர் என்று அ.சா.1- காவல்துறை உதவி ஆய்வாளர் தெரிவித்துள்ளார். மேலும் காவல்துறையினர் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஏழு முக்கிய இடங்களின் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டனர் என்று அ.சா.1 தெரிவித்துள்ளார். மதுரையிலுள்ள ஆயுதக் காவல் படையைச் சேர்ந்த சுமார் பத்து நபர்கள் ஒரே வாகனத்தில் வந்தனர் என்றும், மேல்முறையீட்டாளர் வாகனத்தைப் பாதுகாப்பாக நிறுத்திவைக்கும்படி கூறியதுடன், காவல் படையினர் ஒரே இடத்தில் சேர்ந்து நிற்காமல், இடைவெளிவிட்டு தனித்தனியே நிற்கும்படி கேட்டுக்கொண்டார் என்று அ.சா.1-உதவி ஆய்வாளர் தெரிவித்துள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணையில், மேல்முறையீட்டாளருடன் அவர்கள் அனைவரும் பிற காவலர்களுடன் இணைந்து போராட்டக்காரர்கள்மீது படையை ஏவி, போராட்டக்காரர்களை துரத்திவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர், சம்பவ இடத்தில் அவ்வப்போது நிலைமை சீரடைந்து வருவதைக் குறித்து அ.சா.29-யிடம் கம்பியில்லாத் தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும் அ.சா.1 தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் சார்பாக அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1-உ.ஆ.-ஆலடியான் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

> "காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரான திரு. செல்வராஜ் அவர்களின் பொறுப்பின்கீழ் அன்றைய பாதுகாப்பு பணி ஏற்பாடு செய்யப்பட்டது..... கா.து.க. தனது வாகனத்தின் அருகில் நின்றுகொண்டு, காவல்துறை கண்காணிப்பாளரிடம் நிலைமை சீரடைந்துவருவதை குறித்து கம்பியில்லாத தொலைபேசி மூலம்

தொடர்ந்து தகவல் சொல்லிக்கொண்டிருந்தார் ..... வாகன நெரிசல் ஏற்படாமல் இருக்க எங்களது வாகனங்களைத் தொலைவில் நிறுத்தும்படி கூறியதும் சரியே. அன்றைய நாளன்று காவல்துறை பாதுகாப்பு பணிகள் நன்கு செயல்படுத்தப்பட்டன என்று கூறுவதும் சரியே."

இவ்வாறாக, அ.சா.ஆ.82-இன்படியும், அ.சா.1-இன் சாட்சியத்திலிருந்தும் மேல்முறையீட்டாளர் சம்பவ இடத்திலிருந்து உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு மிகவும் முதுநிலை அதிகாரி அல்லர் என்றும் தெரிகிறது; மேலும், உத்தரவுகளைப் பிறப்பிக்கவேண்டிய அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரே அங்கிருந்த உயரதிகாரி என்றும், அ.சா.30 காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரின் உத்தரவு மற்றும் வழிகாட்டுதலின்பேரில்தான், மேல்முறையீட்டாளர் செயல்படவேண்டும் என்றும் தெரியவருகிறது.

25. அ.சா.2-முத்துபாண்டியன், மதுரையிலுள்ள தினகரன் செய்தித்தாளின் செய்தி பதிப்பாசிரியராக பணிபுரிந்துவந்துள்ளார். அ.சா.2 தனது முதல் விசாரணையில், தான் அத்தாக்குதலைக் குறித்து சென்னையிலுள்ள தினகரன் அலுவலகத்தின் தலைமை இயக்க அலுவலரான (த.இ.அ.) அ.சா.3-ஆர்.எம்.ஆர். இரமேஷிடம் தெரிவித்ததாகவும், அ.சா.3 காவல்துறையினரிடம் தாக்குதல்களை நிறுத்தி, பாதுகாப்பு அளிக்கும்படி வேண்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது முதல் விசாரணையில் கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளார்:-

"காவல் துறையைப் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டபோதிலும், அவர்கள் நடவடிக்கை எதனையும்

எடுக்காமல் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். எனவே, நான் வெளியில் நின்றுகொண்டிருந்த கா.து.க. திரு. இராஜாராமின் கைபேசி எண்ணைப் பெற்றுக்கொண்டு, எங்களது மு.இ.அ.-ஐ அவரிடம் பேசும்படி கூறினேன். கா.து.க. திரு. இராஜாராம் இவ்வழக்கில் 17-ஆவது எதிரியாவார். எங்களது மு.இ.அ., தனது தொலைபேசி மூலம் கா.து.க.-ஆன திரு. இராஜாராமிடம் பேசினார். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது எனக்குத் தெரியாது. பின்னர், மு.இ.அ., மற்றொரு கா.து.க. திரு. கலிபுல்லா கானுடனும் பேசினார்."

அ.சா.2, மேல்முறையீட்டாளரின் சார்பாக தனது குறுக்கு விசாரணையில், தான் மேல்முறையீட்டாளரான இராஜாராமிடம் நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுத்ததாக தெரிவித்துள்ளார். அ.சா.2, அரசுத்தரப்பால் பிறழ்சாட்சியாக கருதப்பட்டார். அரசுத்தரப்பிலான அவரது குறுக்கு விசாரணையின்போது, அ.சா.2 மேல்முறையீட்டாளரிடம் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டபோது, மேல்முறையீட்டாளர்-இராஜாராம் தன்னிடம், "அவரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்றும், அவ்வாறு செய்வதற்கு எந்தவொரு அவசியமும் இல்லை....." என்றும் காவல்துறையிடம் கூறியதை மறுத்துரைத்தார்.

26. தினகரன் அலுவலகத்தின் முதன்மை இயக்க அலுவலரான அ.சா.3-ஆர்.எம்.ஆர். இரமேஷ், நிறையபேர் அலுவலகத்திற்குள் நுழைந்துகொண்டிருப்பதாக அ.சா.2-முத்துபாண்டியன் தன்னிடம் கூறியதாகவும், அலுவலகத்தின் வெளியில் நின்றுகொண்டிருந்த மேல்முறையீட்டாளரின் தொலைபேசி எண்ணை அ.சா.2 தன்னிடம் கொடுத்ததாகவும், அவர் (அ.சா.3) உடனடியாக

மேல்முறையீட்டாளரை தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு கேட்டபோது, மேல்முறையீட்டாளர், தன்னிடம் காவலர்கள் வந்துகொண்டிருப்பதாகவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், நிறையபேர் அலுவலகத்திற்குள் நுழைய தொடங்கிவிட்டதன் காரணமாக, அவர் மேல்முறையீட்டாளரை மீண்டும் அழைத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி வேண்டியதாகவும் அ.சா.3-தினகரன் அலுவலகத்தின் முதன்மை இயக்க அலுவலர் தெரிவித்துள்ளார். அ.சா.3-இன் கூற்றுப்படி, மேல்முறையீட்டாளர் கீழ்க்காணும்படி பதிலளித்தார்:-

> ".....நான் எனது உயரதிகாரிகளிடமிருந்து எந்தவொரு ஆணையையும் இதுவரையிலும் பெறவில்லை. நான், அவரிடம் அவருக்கு நேரடி உயர் அதிகாரியின் தொலைபேசி எண்ணை அளிக்கும்படி வேண்டினேன். அவர் கா.து.க. திரு. கலிபுல்லா கானின் தொலைபேசி எண்ணை என்னிடம் கொடுத்தார். நான் காவல்துறை துணை கண்காணிப்பாளரான திரு. கலிபுல்லா கானை தொடர்பு கொண்டபோது, அவர், என்னிடம், நிறைய நபர்கள் உள்ளே இருப்பதால் பாதுகாப்பிற்கு உதவும்வகையில், அவர் அதிகப்படியான காவல்துறையினரை அனுப்பிவைப்பதாக கூறினார். அப்பொழுது முற்பகல் 11.00 மணி இருக்கும்.....".

அ.சா.2 மற்றும் 3-இன் சாட்சியத்திலிருந்து, மேல்முறையீட்டாளர் அவர்களிடம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதுடன், அவர் அவரது உயர் அதிகாரிகளிடமிருந்து உத்தரவுகள் எதனையும் பெறவில்லை என்றும் பதிலளித்ததாகத் தெரிகிறது. அ.சா.2 மற்றும் 3-இன் சாட்சியத்திலிருந்து

மேல்முறையீட்டாளர் நடவடிக்கையை எடுத்துள்ளார் என்றும் அவரது தரப்பில் எந்தவொரு கடமை தவறுகையும் இல்லை என்பது தெரிகிறது.

27. மதுரை மாவட்டத்தின் அப்பொழுதிருந்த காவல்துறை கண்காணிப்பாளரான (ஊரகம்) அ.சா.29-டி.எஸ். அன்பு, தினகரன் அலுவலகத்தில் பாதுகாப்பு அளிப்பதற்கான ஆணை (சா.பி.82) வழங்குதல் குறித்து தெரிவித்திருந்தார். அ.சா.29, தனது சாட்சியத்தில் அ.சா.30-செல்வராஜ், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்-மேல்முறையீட்டாளர், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோர் அடங்கிய மொத்தம் 41 நபர்களை, அவர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தியிருந்ததாகத் தெரிவித்திருந்தார். மேல்முறையீட்டாளரின் சார்பாக அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.29 கீழ்வருமாறு தெரிவித்துள்ளதாவது

> "அ.சா.ஆ.82-இன்படி, மெய்காவல் மற்றும் பாதுகாப்பு அளிப்பதற்காக அனுப்பப்பட்ட உயரதிகாரி எஸ்.பி.செல்வராஜ் ஆவார். அத்தகைய அதிகாரி எவரும் அவருக்காக ஒதுக்கப்பட்ட பணி இடத்தைவிட்டு செல்லவிரும்பினால், அவர் என்னிடமிருந்து அனுமதியை பெறவேண்டும், ஒதுக்கப்பட்ட இப்பணியிடத்திலிருந்த திரு. செல்வராஜ், என்னிடமிருந்து எந்த அனுமதியையும் பெறவில்லை. அவர் என்னிடமிருந்து அனுமதி பெறவில்லையென்றால் அவர் அவருக்கு கொடுக்கப்பட்ட பணியை செய்துவந்தார் என்றுதான் பொருள்படுகிறது. அந்த மெய்க்காவல் பணி குழுவின் உயர் அதிகாரியே அக்குழுவிற்கு பொறுப்பாவார். ....."

அ.சா.29 மற்றும் அ.சா.ஆ.82-இன் சான்றிலிருந்து, அ.சா.30 மெய்க்காவல் பொறுப்பிற்காக நியமிக்கப்பட்ட உயரதிகாரி என்பது தெளிவாகிறது.

28. காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரான அ.சா.30-செல்வராஜ் தனது சாட்சியத்தில், மேல்முறையீட்டாளருடன் சேர்த்து 35 காவல் பணியாளர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், முற்பகல் சுமார் 11.18 மணியளவில் சட்ட-ஒழுங்கு பிரச்சனை ஏதுமில்லாததால், அவர் உயர் நீதிமன்றத்திற்கு சென்றதாகவும், முற்பகல் சுமார் 11.40 மணியளவில் தினகரன் அலுவலகத்திலிருந்து புகை வெளிவருவதை கவனித்த அவர் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்றதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், அ.சா.30, தீயை அணைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மேல்முறையீட்டாளரிடம் விசாரித்தபோது, தீயணைப்பு படையினருக்கு ஏற்கெனவே தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்தார் என்றும் கூறினார். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவரது குறுக்கு விசாரணையில், அ.சா.29-காவல்துறை கண்காணிப்பாளரின் சாட்சியப்படியும், அ.சா.ஆ.82-இன்படியும், மெய்க்காவலுக்காகவும், பாதுகாப்பிற்காகவும் அனுப்பப்பட்ட உயரதிகாரிதான், அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளராவார். தினகரன் அலுவலகத்தின் அருகே போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது, அ.சா.30 எதற்காக அவ்விடத்தைவிட்டு உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார் என்பது தெரியவில்லை. தினகரன் அலுவலகத்திற்கு அருகே மாற்றுப்பணிக்காக அனுப்பப்பட்டிருப்பதால் அ.சா.30 அவருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடத்தைவிட்டு செல்லவிரும்பினால், அவர் தனது உயரதிகாரியிடமிருந்து அனுமதி பெற்றிருக்கவேண்டும். அ.சா.30, உயர் நீதிமன்றம் செல்வதற்காக அ.சா.29 இடமிருந்து அத்தகைய அனுமதியேதும் பெற்றதற்காக பதிவு ஏதுமில்லை. அ.சா.29-காவல்துறை கண்காணிப்பாளர்,

குறுக்குவிசாரணையின்போது, அ.சா.30, அவ்விடத்திலிருந்து உயர் நீதிமன்றம் செல்வதற்கு தன்னிடம் அனுமதிபெறவில்லை என்று தெரிவித்துள்ளார்.

29. விசாரணை நீதிமன்றத்தால் தீர்மானித்தப்படியும் அ.சா.ஆ.82 மற்றும் அ.சா.29-காவல்துறை கண்காணிப்பாளரின் சாட்சியமும் தினகரன் அலுவலகம் பாதுகாப்பு பணி அ.சா.30-இன் கட்டுப்பாட்டின்கீழ் அளிக்கப்பட்டது என்பதையும் அ.சா.30-இன் உத்தரவின்படி மேல்முறையீட்டாளர் செயல்பட்டு கொண்டிருந்தார் என்பதையும் காண்பிக்கின்றன. அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் அ.சா.ஆ.82-இன் வரிசை எண் 1-இல் காட்டப்பட்டுள்ளார் என்றும், எவ்வகையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது மேலதிகாரியால் தீர்மானிக்கப்படவேண்டியுள்ளது என்றும் விசாரணை நீதிமன்றம் சரியாகவே சுட்டிக்காட்டியுள்ளது. மேல்முறையீட்டாளரும், மற்ற காவல் பணியாளர்களும், காவற்படையை பயன்படுத்தி, ஆர்பாட்டக்காரர்களை துரத்திவிட்டனர் என்ற சாட்சியம் பதிவாவணத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் சம்பவம் நடந்தயிடத்தில் இருந்தும், எதிரி, அவரது முன்னிலையிலேயே குற்றம் புரிந்தும் அவர் எதிரியை கைது செய்யவில்லை என்பதை உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. முன்பே விவாதித்துள்ளபடி, மேல்முறையீட்டாளர் உட்பட பாதுகாப்பு பணியிலிருந்த காவலர்கள் ஆர்பாட்டக்காரர்களை துரத்திச்சென்றனர் என்ற சாட்சியம் பதிவாவணத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. அ.சா.1-காவல்துறை துணை ஆய்வாளரின் சாட்சியத்திலிருந்து மேல்முறையீட்டாளரும், மற்ற காவல்துறை அலுவலர்களும் நடவடிக்கை எடுத்து, மேலும், போராட்டக்காரர்களை துரத்திவிட்டதற்காக காவற்படையை ஏவினர் என்று அ.சா.1 காவல்துறை உதவி ஆய்வாளரின் சாட்சியத்திலிருந்து தெரிகிறது. மேலும் அ.சா.2-தினகரன் அலவலகத்தின் செய்தி

பதிப்பாசிரியர் மற்றும் அ.சா.3-தினகரன் அலுவலகத்தின் முதன்மை இயக்க அலுவலர் ஆகியோரின் சாட்சியத்திலிருந்து, மேல்முறையீட்டாளருக்கு அவரது உயர் அதிகாரிகளிடமிருந்து எந்த ஓர் உத்தரவும் வரவில்லை என்றும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறி மேல்முறையீட்டாளர் அவர்களுக்கு உடனடியாக பதிலளித்ததாகவும் தெரிகிறது. அ.சா.2 மற்றும் அ.சா.3-இன் சாட்சியத்திலிருந்து மேல்முறையீட்டாளரின் தரப்பில் கடமைத்தவறுகை ஏதுமில்லை என்பது தெரிகிறது.

30. அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், பாதுகாப்பு பணிப் பொறுப்பு அலுவலர் என்பது அ.சா.29-இன் சாட்சியமும் அ.சா.ஆ.82-ம் தெளிவாக காண்பிக்கின்றன. அக்குறிப்பிட்ட சமயத்தில் காவல்துறை துணை கண்காணிப்பாளராயிருந்த மேல்முறையீட்டாளர், அ.சா.30-இன் கண்காணிப்பிலும், கட்டுப்பாட்டிலும் இருந்தார். அ.சா.30 தனது சாட்சியத்தில், மேல்முறையீட்டாளர் அவரது உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாததைக் குறித்து ஏதும் தெரிவிக்கவில்லை. இ.த.ச., பிரிவு 217-இன் ஆக்கக்கூறுகளை ஈர்க்கும்பொருட்டு எதிரியைக் காப்பாற்றும் உள்நோக்கத்துடன் சட்ட ஆணையைக் கீழ்ப்படியாமை இருத்தல்வேண்டும். மேல்முறையீட்டாளர்-எதிர், சட்ட ஆணையை அல்லது அ.சா.30-உயர் அதிகாரியின் ஆணையை கீழ்ப்படியாதிருந்தார் என்றோ அல்லது எதிரியைக் காப்பாற்றும் உள்நோக்கத்துடன் செயல்பட்டார் என்றோ காண்பிப்பதற்கு அரசுத்தரப்பு சான்றேதும் அளிக்கவில்லை.

31. தினகரன் அலுவலகம் அருகில், சம்பவம் நடந்தசமயத்தில், அதாவது 9.5.2007 அன்று முற்பகல் 11-12.00 மணிக்கு இடைப்பட்ட காலத்தில், நிலைமை மிகவும் மோசமானது என்பது உண்மை என்றபோதிலும், போராட்டக்காரர்களை

துரத்திவிடுவதற்கு காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளது என்பதும் பதிவாவணத்திலுள்ளது என்பதாகும். அத்தகைய சான்றின் துணைகொண்டுபார்க்கையில், மேல்முறையீட்டாளரின் தரப்பில் செயலின்மையோ அல்லது அசட்டையோ இருந்ததாகக் கூறமுடியாது. சட்டம் ஒழுங்கு பிரச்சனை நிலவும் அத்தகையதொரு பதற்றமான சூழ்நிலையில், சாதாரணமாக ஒரு உயரதிகாரியானவர் சூழ்நிலையை எவ்வாறு கையாளவேண்டும் என்பதைக் குறித்து அறிவுரை கூறுவார், கீழ்நிலை அலுவலர்கள் அவற்றை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றனர். மேலதிகாரியின் உத்தரவின்றி ஒவ்வொரு கீழ்நிலை காவல் அலுவலரும் தத்தமது சுயவிருப்பப்படி நடவடிக்கை எடுக்க தொடங்குவார்களானால், அது கூச்சலுக்கும், குழப்பத்திற்கும் வழிவகுத்துவிடும். நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பானது மேலதிகாரியிடம்தான் உள்ளது. இவ்வழக்கில் அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரிடம் இருந்தது. இ.த.ச., பிரிவு 217 மற்றும் 221-இன் கீழ் மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பை நிலைநிறுத்த, அ.சா.30-ஆன பாதுகாப்பு பணிப்பொறுப்பு வகிக்கும் அதிகாரியின் ஆணைகளை மேல்முறையீட்டாளர் கீழ்ப்படியவில்லை என்றோ, மேல்முறையீட்டாளரின் தரப்பில் கடமை தவறுகையும், செயலின்மையும் இருந்ததென்றோ காண்பிப்பதற்கு பதிவாவணம் ஏதுமில்லை.

32. முன்னதாக சுட்டிக்காட்டியுள்ளபடி, இ.த.ச., பிரிவு 217-இன் கீழ் குற்றத்தை நிரூபிக்கும் இன்றியமையா ஆக்கக்கூறுகளில் ஒன்று யாதெனில், அரசுப் பணியாளர் ஒருவர், எவரையேனும் சட்டப்படியான தண்டனையிலிருந்து காக்கும் உட்கருத்துடன் சட்ட ஆணைகளை கீழ்ப்படியாதிருத்தல்வேண்டும் என்பதாகும். தற்போதைய வழக்கில், மேல்முறையீட்டாளர் சட்டத்தின் ஆணைகள் எவற்றுக்கும் கீழ்ப்படியவில்லை எனக் காட்டுவதற்கு சான்றேதுமில்லை. மாறாக, மேல்முறையீட்டாளரான

அ.சா.1-காவல்துறை உதவி ஆய்வாளர் மற்றும் பிற காவல்துறை பணியாளர்கள் சமூகவிரோதிகளுக்கெதிராக சிறு காவற்படையை ஏவியுள்ளனர். இவ்வாறாக, மேலும் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாமல் தடுப்பதற்காக அவர்களை துரத்திவிட்டனர் என்பதைக் காட்டுவதற்கு தெளிவான சான்றுள்ளது. ஆணைகளையும், கட்டளைகளையும் பிறப்பிப்பதற்காக சம்பவயிடத்திலிருந்தவர்களான அ.சா.30-இன் அல்லது அ.சா.29-காவல்துறை கண்காணிப்பாளரின் கட்டளைக்கு மேல்முறையீட்டாளர் கீழ்ப்படியவில்லை என்பதைக் காட்டுவதற்கு சான்று முற்றிலுமில்லை. இ.த.ச., பிரிவு 217-இன் கீழ் தண்டனைத் தீர்ப்பை நிலைநிறுத்த மேல்முறையீட்டாளர் செயலாற்றத்தவறினார் என்பதை மெய்ப்பிக்கும் சான்றேதுமில்லை.

33. இ.த.ச., பிரிவு 221-இன் கீழான தண்டனைத் தீர்ப்பைப் பொறுத்தவரையில், இ.த.ச., பிரிவு 221-இன் கீழான இன்றியமையா ஆக்கக்கூறுகளில் ஒன்றானது, உட்கருத்துடன் நபர் ஒருவரை கைது செய்யாமை அல்லது வேண்டுமென்றே அந்நபரை தப்பிச்செல்ல உதவிசெய்வதாகும். சம்பவயிடத்திலிருந்த அ.சா.29-காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அ.சா.30-காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆணைகளைப் பிறப்பித்ததன்படியே மேல்முறையீட்டாளர் செயல்பட்டார். சம்பவம் நடந்து முடிந்தபின்னர், அ.சா.29, மேல்முறையீட்டாளரிடம் எதிரிகளை தேடும்படி உத்தரவிட்டார். அதன்படியே, மேல்முறையீட்டாளர் எதிரிகளை தேடிச்சென்று, 15.5.2007அன்று 1-ஆம் எதிரியையும் (வி.பி. பாண்டி (எ) அட்டாக் பாண்டி), 16.5.2007 அன்று 2-ஆம் எதிரியையும் (எம். திருசெல்வம்) மற்றும் 10.5.2007 அன்று 3 மற்றும் 4-ஆம் எதிரிகளையும் (பிரபு (எ) ஆரோக்கியபிரபு மற்றும் எம். சரவணமுத்து) கைது செய்தார். இ.த.ச., பிரிவு 221-இன் கீழான

தண்டனைத் தீர்ப்பை நிலைநிறுத்த மேல்முறையீட்டாளர் வேண்டுமென்றே எதிரியை சம்பவம் நடந்தயிடத்தில் கைதுசெய்யவில்லை என்பதைக் காண்பிக்கும் சான்றேதுமில்லை.

34. சான்றினை மதிப்பீடு செய்ததன்பேரிலும், இ.த.ச., பிரிவுகள் *217* மற்றும் *221*-இன் ஆக்கக்கூறுகளை பரிசீலித்ததன்பேரிலும், விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை விடுதலைசெய்தது. இ.த.ச., பிரிவுகள் *217* மற்றும் *221*-இன் ஆக்கக்கூறுகள் நிறுவப்படவில்லை என்ற நம்பத்தகுந்த ஒரு கருத்துரையான காண்முடிவை விசாரணை நீதிமன்றம் பதிவுசெய்துள்ளபோது, விசாரணை நீதிமன்றத்தின் முடிவுடன் உயர் நீதிமன்றம் அதன் கருத்துரைகளைப் பதிலமைத்திருக்கக்கூடாது. மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரையில், அரசுத்தரப்பு அவரது குற்றத்தை நிரூபிக்காததால், மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பு நிலைநிறுத்தப்படமுடியாது. எங்களது ஆழ்ந்தாராய்ந்தக் கருத்தின்படி, விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட விடுதலை உத்தரவை உயர் நீதிமன்றம் எதிர்மறையாக்கியது சரியல்ல மற்றும் மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரையில் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நிலைநிறுத்தத்தக்கதல்ல, மேலும் மேல்முறையீட்டாளர் விடுதலை செய்யப்படுகிறார் என்பதாகும்.

35. மேல்முறையீட்டாளரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பி. பாலாஜி, குற்றவியல் வழக்கின் காரணமாகவே மேல்முறையீட்டாளருக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய பலன்கள் கொடுக்கப்படவில்லை என்று பணிந்துரைத்து, உரிய உத்தரவிடும்படி வேண்டுரைத்தார். மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பு நீக்கறவு செய்யப்பட்டு, அவர் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால், அவர் சட்டத்திற்குட்பட்டு அவரது பரிகாரத்திற்கு தீர்வுகாண

தன்னுரிமையுடையவராவார். மேல்முறையீட்டாளரின் விடுதலை குறித்து தொடர்புடைய அதிகாரிகள் கவனத்திற்கொள்ளுதல்வேண்டும்.

36. மேல்முறையீட்டாளர், எதிரிகளை காப்பாற்றும் உட்கருத்துடன் சட்டத்திற்கு கீழ்ப்படியவில்லை என்றும், அவர் எதிரிகளை கைதுசெய்வதில் சிரத்தைக்காட்டவில்லை என்றும் கூறி இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டார். அரசுத்தரப்பால் அளிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியத்தைப் பரிசீலித்ததன்பேரில், இ.த.ச., பிரிவுகள் 217 மற்றும் 221-இன் கீழ் மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்படவில்லை என்று நாங்கள் தீர்மானித்து, மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பை நீக்கறவுசெய்து, மேல்முறையீட்டாளரை விடுதலை செய்கிறோம். மேல்முறையீட்டாளர் முதன்மை சம்பவத்தில் எவ்விதத்திலும் தொடர்புடையவரல்லர். மேல்முறையீட்டாளரை விசாரணைக்குட்படுத்திய அக்குற்றச்சாட்டே, மற்ற எதிரிகளை விசாரணைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டிலிருந்து வேறுபடுகிறது மற்றும் அது தனிப்பட்டதுமாகும். எனவே, இந்த மேல்முறையீடு தனித்து கேட்கப்பட்டது. இ.த.ச., பிரிவு 302 மற்றும் பிற குற்றங்களின் கீழ் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட மற்ற எதிரிகள் மேல்முறையீடுகள் தாக்கல் செய்துள்ளனர், அம்மேல்முறையீடுகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளன. மற்ற எதிரிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் அவற்றின் தகுதிப்பாடுகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படவேண்டும், மேலும், இம்மேல்முறையீடுகளின் காண்முடிவுகள், எவ்வகையிலும் அம்மேல்முறையீடுகளிலுள்ளவற்றைக் கொண்டிருத்தல்கூடாது.

37. முடிவில், இ.த.ச., பிரிவு 217 மற்றும் 221-இன் கீழ் மேல்முறையீட்டாளர்-எதிரி எண் 17-க்கு கு.மே. (எம்.டி.) எண் 274/2011-இல் மெட்ராஸ்

உயர் நீதிமன்றத்தின் மதுரை நீதியராயத்தால், *21.3.2019* மற்றும் *25.3.2019*-ஆம் தேதியன்று தண்டனைத் தீர்ப்பளித்து பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நீக்கறவு செய்யப்பட்டு, இம்மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன மற்றும் மேல்முறையீட்டாளர் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி
மாண்புமிகு நீதியரசர் திரு. எ.எஸ். போபண்ணா

புது தில்லி,
26.11.2019.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."